# சிருஷ்டிப்பில் படிப்படியாக பார்க்கலாம்- நிகழ்ச்சி 1

**அறிவிப்பாளர்**: இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில், அறிவியலின் காரணமாக தங்களுடைய கிறிஸ்தவ விசுவாசத்தை கைவிட்டவர்களின் கேள்விகளுக்கு இன்று பதிலளிக்க இருக்கிறோம். ஏதோவொரு கட்டத்தில் நீங்கள் இன்றைய நவீன அறிவியலாவது சிருஷ்டிப்பை பற்றிய வேத பதிவிகளுடன் ஒப்பிட இயலாதென்று நினைக்கிறீர்கள். ஆனால் இந்த தொடரில் சமீபத்திய அறிவியல் ஆய்வுகள் உங்களை விசுவாசத்திற்கு நேராக நடத்துவதற்கான ஆதாரங்களை பார்க்க இருக்கிறோம். அதோடு, மற்ற கேள்விகளுக்கும் பதிலளிக்க இருக்கிறோம், இயற்கையின் சாதனைகள் வேதத்தின் பதிப்பில் இருக்கிறது என்ற எதிர்பார்ப்புடன் இருக்க வேண்டியது அவசியமா?

டாக்டர். வால்டர் கெய்சர்: எதிர்பார்ப்பு அவசியம் தான், ஏனென்றால் காரணகர்த்தா ஒருவர்தானே. அதாவது, ஒரு குறிப்பிட்ட கட்டிட கலைஞரால் கட்டப்பட்ட ஒரு கட்டிடத்தையும் அவர் கட்டிய வேறொரு கட்டிடத்தையும் பார்க்கும்போது, நீங்கள், இது பிரான்க் லாயிட் ரைட் கட்டிடம் என்பீர்கள்.” இந்த பிரபஞ்சத்தை பார்க்கும் போது, அது தேவனால் உண்டாக்கப்பட்டது. அது எல்லாவற்றிலும்

இருப்பது, “மேட் இன் USA அல்ல ஆனால், “ஜீவனுள்ள தேவனால் உண்டானது என்றிருக்கிறது.” நீங்க வசனத்தை பார்த்தாலும், அதுவும் தேவனிடத்தில் இருந்து வந்ததுதான். இதன், காரணகர்த்தா ஒருவரே. இரண்டையும் உண்டாக்கியது ஒருவரே. இதன் வியாக்கியானங்கள் மாறுபடலாம், ஆனால் ஆதாரங்கள் மாறாது, மூல குறிப்புகள் மாறாதவைகள். அதே தேவனிடத்திலிருந்து தான் ஆதி தகவல்கள் வருகிறது. இல்லாவிட்டால் சிருஷ்டிப்பின் உபதேசத்தை நாம் தூர எரிந்திருப்போம். அப்படியில்லாவிட்டால் நாம் தேவ ஆவியினால் அருளப்பட்ட, தேவ வார்த்தையை புறக்கநித்திருப்போம். எதையும் நம்மால் புறக்கணித்திட முடியாது. அவை இரண்டும் ஜீவனுள்ள தேவனிடமிருந்து வருகிறது.

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு எனது விருந்தினர் வானியலாளரான டாக்டர். ஹக் ராஸ் டொரான்டோ பல்கலைகழகத்தில் வானியலில் பிஹெச்டி பெற்றவர், கேல் டேக்கில் விண்மீன் திரள் ஆராய்ச்சியில் டாக்டர் பட்டம் பெற்றவர். அவர் பல புத்தகங்களையும் எழுதியிருக்கிறார், அவருடைய சமீபத்திய புத்தகம், நேவிகேடிங் ஜெனிசிஸ். அதோடு நாம் எபிரேய பண்டிதரான டாக்டர். வால்டர் கேயசருடைய வார்த்தைகளையும் கேட்க இருக்கிறோம், இவர் உலகிலேயே பழைய ஏற்பாடு மற்றும் எபிரேய மொழியில் அதிக அறிவாற்றல் உடைய நபராக பலரால் கருதப்படுபவர். எங்களோடு இணைந்து இந்த நிகழ்ச்சியில் எப்படி சிருஷ்டிப்பின் பதிவை

கொண்டுள்ள ஆதியாகமம் 1 மற்றும் 2 நவீன அறிவியல் கண்டுபிடுப்புகளுடன் ஒத்துப்போகிறது என்பதை கேட்டு அறிந்துகொள்ளுங்கள் இது ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சி

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். இன்றைக்கு அருமையான காரியத்தை பார்க்க இருக்கிறோம். நாம் குறைந்தது 3 தலைப்புகளை பார்க்க இருக்கிறோம். முதலாவதாக, இரவு நேரத்தில் வானத்தை பார்க்கும்போது நட்சத்திரங்களை பார்க்கின்றோம், மொத்தம் எத்தனை நட்சத்திரங்கள் இருக்கிறது? வெல், இன்றைக்கு அதை தெரிந்துகொள்வோம். இரண்டாவதாக, தேவனே இந்த பிரபஞ்சத்தை வடிவமைத்து உருவாக்கினார் என்பதற்கான மறுக்க முடியாத ஆதாரத்தை குறித்து பேசிட இருக்கிறோம். அதைதான் விஞ்யானிகள் இருண்ட சக்தி என்கின்றனர், அதை குறித்து இன்றைக்கு பேச இருக்கிறோம். அதன் பிறகு ஆதியாகமம் 1றை குறித்தும் பேசிட இருக்கிறோம். சிருஷ்டிப்பின் ஆறு நாட்களின் கால நேரம் என்ன, ஆதியாகமம் 1 மற்றும் 2ல் சொல்லப்பட்டபடி 7 நாட்கள் தானா? இன்றைக்கு பல சுவாரஸ்யமான தலைப்புகளை வைத்திருக்கிறோம். சரி, ஹக், முதல் விஷயத்திலிருந்து தொடங்கிடலாம், அது என்னன்னா, சுமாரா, இப்ப இந்த பிரபஞ்சத்தில எத்தனை நட்சத்திரங்கள் இருக்கின்றன?

**டாக்டர். ஹக் ராஸ்:.:** வெல், பார்க்ககூடிய உலகில் சுமார் 50 பில்லியன் ட்ரில்லியன் நட்சத்திரங்கள் இருக்கிறது. நமக்கு அது தெரியும் ஹபிளினுடைய அல்ட்ரா டீப் துறைக்காக நன்றி, விண்வெளியின் குறுகிய சாரத்தின் வழியாக எல்லா நட்சத்திரங்களையும் வின்மீண்களையும் பார்க்க உதவியாக இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், சரி, உங்களுடைய, கேள்வி இதுதான், இந்த எல்லா நட்சத்திரங்களும் அவசியமானதா அல்லது தேவன் இருக்கட்டும் என வைத்தாரா? என்ன நடக்கிறது என்பதை காண்பிக்கும் ஒரு வீடியோவை காண்பிக்க இருக்கிறோம். இதை பாருங்கள்.

திரைப்படம்: ஜேர்னி டுவார்ட் கிரியேஷன்ஸ்

**அறிவிப்பாளர்:** நம்முடைய பால்வழியை மையத்திலிருந்து சில ஆயிரக்கணக்கான ஒளியாண்டுகளை கடந்து பழைய நட்சத்திரங்கள் இருக்கும் ஒரு ஒளிவட்டத்தை அடைகிறோம். ஆரம்ப கால இந்த நட்சத்திரங்கள் உயிர் வாழ அத்தியாவசியமான மூலக்கூறுகளை நிலைபடுத்த அவசியப்பட்டது. ஆதி காலத்து இந்த நட்சத்திரங்கள் நம்முடைய கிரகத்திற்கும் நாம் வாழ்வதற்கும் உறுதுணையாக இருந்ததென்று சொல்லலாம். நட்சத்திரங்கள் தங்களுடைய எரிபொருள் தீரும்போது மரித்து, அதனுடைய சாம்பல்களை விட்டுசெல்கிறது, அந்த

மூலக்கூறுகள் அடுத்த சந்ததியான நட்சத்திரங்களும் கிரகங்களும் உருவாக அவசியமாக இருக்கிறது. ஒன்பது பில்லியன் ஆண்டுகள் பாதிப்புள்ள மரித்த மரித்துக்கொண்டிருக்கும் நட்சத்திரங்களின் சாம்பல்களினால்தான் இன்றைக்கும் நம்முடைய பூமி நிலைத்திருக்கிறது.

நமது சூரியன் மற்றும்  அதைவிட சிறிய நட்சத்திரங்கள் தனது வெளிப்புற படலத்தை இழந்திடும். அதனுடைய அணு எரிபொருள் முற்றிலும் தீரும்பொழுது, தீப்பற்றிய பிறகு இருக்கும் தழல் போல அது காணப்படும். இந்த தழல்கள்,  வெண்ணிற குள்ளர்கள்  எனப்படும், அது தனிய 10 பில்லியன் ஆண்டுகளாகும், நாம் உயிர் வாழ்வதில் பெரிய பங்கு வகிக்கிறது. அதாவது அந்த வெண்ணிற குள்ள நட்சத்திரங்களிலிருந்துதான் உயிர்பிழைக்க தேவையான ப்ளோரின் உண்டாகிறது. ப்ளோரின் இல்லாமல், சில புரதசத்துகள் உருவாவது கடினம், இந்த பூமியில் உயிர்வாழ்வதும் சாத்தியமாகாது. இன்னும் மறுக்க முடியாத காரியங்களும் இருக்கிறது அதாவது இப்பிரபஞ்சத்தில் ட்ரில்லியன் கணக்கில் விண்மீன் திரள்கள் இருந்தாலும், நமது விண்மீண், பால் வழியானது, தனகத்தே ப்ளோரினை கொண்டுள்ள வெகுசிலவற்றில் முதன்மையாக உள்ளது.

சூரியனை விட பெரிய நட்சத்திரம் எரிபொருள் பற்றாகுரையடையும் போது, அதனுடைய மேற்புறம் திடீரென்று நிலைகுளைந்திடும். இறுதியில் வெடித்து சிதறும்படி போதுமான அளவு மையப்பகுதிக்கு

தாக்கத்தை ஏற்படுத்துகிறது, நம்முடைய விண்மீன் திரளிலும் வெடித்து சிதறும் காரியங்கள் நடந்து வருகிறது, பகல் வெளிச்சத்தில் பார்க்ககூடிய விதத்தில் பிரகாசமாக இருந்திடும். இறுதியாக பிரளய வெடிப்பு உண்டாகிறது, சூப்பர் நோவா, வாழ்வாதாரத்திற்கு தேவையான பல மூலக்கூறுகளை உற்பத்திசெய்கிறது: கார்பன், நைட்ரஜன், ஆக்சிஜன், பாஸ்பரஸ், பொட்டாஷியம், சல்பர், ஐயன், காப்பர், சில்வர், மற்றும் பல.  அது மீனிடைவெளியில் பிற்காலத்தில் நட்சத்திரங்களை உருவாக்கும் ரசாயனம் மற்றும் துகள்களின் மேகம் உண்டாகும்படியாக சிதரப்படுகிறது.

பலதரப்பட்ட இந்த நட்சத்திரங்களும் பல விதத்தில் வாழ்வா சாவா என்று இருக்கும் நட்சத்திரங்களும் நம்முடைய வாழ்வில் பெரிய பங்கு வகிக்கிறது. வீணான நேரம் என்று சொல்ல முடியாது, நட்சத்திரங்கள் உருவான கடந்த 14 பில்லியன் வருடங்களின் ஒவ்வொரு நிமிடமும் இந்த பூமியில் நாம் வாழ தேவையான மூலக்கூறுகளை உண்டாக்க அவசியமாக இருந்திருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், ஹக், இது உண்மையில் வியப்பாக இருக்கிறது. வேதத்தில் கூட, வாதகமத்தின் முதல் வசனம், நாம் இப்போது பார்த்த அனைத்தையும் 10 வார்த்தைகளில் உள்ளடக்கியுள்ளது: “ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.” சாமீப காலம் வரைக்கும் இதெல்லாம் இருப்பது நமக்கு

தெரியாது, இப்ப நீங்க, நட்சத்திரங்கள் உருவாவதும் அவை எரிந்து சாம்பலாகிறதும் நமக்கு அத்தியாவசியமாக இருக்கிறது என்கிறீர்கள். தேவன் மனிதனை உருவாக்கி பூமியில் வைத்தார், நம்மை உருவாக்கி இங்க வைத்தார், இங்கு வாழ அவசியமான அனைத்தையும் பல காலத்திற்கு முன்பாக ஆயத்தப்படுத்தினார்.

**ராஸ்:**..ரைட். தனிம வரிசை அட்டவணையில் 98 மூலக்கூறுகளை பார்க்க முடியும். இந்த பூமியில் வாழ்வதற்கு இந்த காரியங்கள் அவசியமாக இருக்கிறது, இந்த பிரபஞ்சத்தின் முழுமையான தன்மையை வைத்து உலகம் உண்டானபோது இருந்த முதல் நான்கு மூலக்கூறுகளை அறியலாம். மேலும் ஹைட்ரஜன் மற்றும் ஹீலியத்தின் துல்லியமான விகிதம் எதிர்கால நட்சத்திலங்களில் எந்த விதமான மூலக்கூறுகள் உருவாகும் என்று நிர்ணயித்திடும். கிட்டத்தட்ட 3 தலைமுறைகளாகும், வெற்றிகரமான 3 தலைமுறைகள், நம்முடைய வாழ்விற்கு தேவையான மூலக்கூறுகளை ஒரு நட்சத்திரம் உருவாக்கிட அவ்வளவு நாளாகும். உதாரணமாக, சூபர்நோவாவிலிருந்து கிடைக்கும் உரேனியம் மற்றும் தோரியம் கண்டங்களை உண்டாக்க அவசியமாகும் அதினால் நாம் இந்த பூமியில் கடல்களையும் கண்டங்களையும் கொண்டிருக்க முடியும்.

**ஆன்கர்பெர்க்:** எதற்கு எவ்வளவு?

**ராஸ்:**எதற்க்காக எவ்வளவு? வெல், அதாவது, மொத்த தன்மையை வைத்து முதல் நான்கு நிமிடத்தில் எந்த விதமான மூலக்கூறு உருவாகும் என்பது நிருபனமாகிடும். அதோடு இந்த பிரபஞ்சம் தனது வரலாற்றில் எப்படியெல்லாம் சுழன்றிருக்கிறது என்பதையும் அறிந்து கொள்ள முடியும். மனிதர்களுடைய வாழ்வாதாரம் சீராக இருப்பதற்கு நட்சத்திரங்கள் ஒன்றுக்கு ஒன்று குறுப்பிட்ட துலைவில் இருக்க வேண்டியதும் மிகவும் அவச்சியமானதாகும்.

**ஆன்கர்பெர்க்:** உண்மையில் வார்த்தியே இல்லை. இரண்டாவதை பார்க்காலாம், அதுதான் இருண்ட சக்தி. இந்த பிரபஞ்சத்தில் நமக்கு கிடைத்த மறுக்க முடியாத துல்லியமான ஆதாரம் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இதுவும் இந்த பூமியில் உயிர்வாழ அத்தியாவசியமானது அதோடு தேவன் இந்த விதிகளை நம்முடைய நலனுக்காக வைத்திருப்பதையும் நமக்கு எடுத்துரைக்கிறது. சரி, முதலாவதாக, இது என்னது? உங்களுடைய ஆவணப்படத்திலிருந்து “ஜர்னி டுவர்ட் கிரியேஷன்” சில காட்சிகளை வைத்திருக்கிறோம். நீங்க, இப்ப, அதை பார்க்கும்படி விரும்புகிறேன்.

<u>திரைப்படம்: ஜேர்னி டுவார்ட் கிரியேஷன்ஸ்</u>

**அறிவிப்பாளர்:** பூமியிலிருந்து நாம் ஆறு அல்லது ஏழு பில்லியன் ஒளியாண்டுகள் கடந்தபிறகு, இந்த குறிப்பிட்ட காரியத்தை எதிர்கொள்கிறோம். 2000 வது ஆண்டின் ஏப்ரல் மாதத்தில்

விஞ்யானிகள் பூமியின் பலதரப்பட்ட தன்மையை கண்டறியும்படி அண்டார்டிக்காவின் குளிர்ந்த சூழ்நிலையில் பலூன் மவுன்ட்டட் தொலைநோக்கி மூலம் செய்த ஆராய்ச்சியின் அறிக்கையை வெளியிட்டனர். பூமர்ரங் ப்ராஜெக்ட் என்று அறியப்படும், தெந்துருவத்தின் குளிர்ந்த சூழலானது ஆராய்ச்சியாளர்கள் பூமியின் படர்ந்த தன்மையை துல்லியமாக அளவிட பெரிதும் உதவியாக இருந்தது. சொல்லப்போனால் சிருஷ்டிப்பின் நிகழ்வின் முதல் 8 பில்லியன் ஆண்டுகளுக்கு பிறகு, பிரபஞ்சத்தின் விரிவாக்க நிலை மெதுவாக குறைந்துவிட்டது, ஒரு குண்டு வெடிப்பிற்கு பிரகுன்டாகும் அமைதிபோல. ஆனால் பூமர்ரெங் சோதனைகள் கடந்த 6 பில்லியன் ஆண்டுகளாக பிரபஞ்சத்தின் விரிவாக்க செயல் துரிதமாக நடைபெறுவதை வெளிபடுத்தியுள்ளது.

அகிலத்தின் விரிவாக்கத்தை பற்றிய வரலாற்று பதிப்புகளில் 2 முக்கிய துல்லியமான ஆதிக்கம் இருப்பதை விஞ்யானிகள் கண்டறிந்துள்ளனர் - மாஸ் டென்சிட்டி மற்றும் ஸ்பேஸ் எனர்ஜி டென்சிட்டி. மாஸ் டென்சிட்டி, பிரபஞ்சத்தின் முதல் பாதியை ஆண்டுகொண்டிருந்தது, அண்டசராசரம் விரிவடைவதை தாமதமாக்கியது, ஆனால் ஸ்பேஸ் எனர்ஜி டென்சிட்டி, சமீப காலமாக அண்டசராசரத்தை ஆண்டுவரும் இது, துரிதப்படுத்தியுள்ளது. இதுவரை கண்டுபிடித்திராத துல்லியமான படைப்பை இந்த சமநிலை தன்மை வெளிப்படுத்தியது. ஒருவேளை இந்த மாஸ் டென்சிட்டி $10^{60}$ க்கு குறைவாகவோ வேறுபாடோ

இருந்திருந்தாலும், அல்லது ஸ்பேஸ் எனர்ஜி டென்சிட்டி $10^{120}$ ல் ஒரு பாகம் அதிகமாவோ வேறுபட்டோ இருந்திருந்தால், பிரபஞ்சத்தில் எங்கும் உயிர்வாழ்வது, மிகவும், கடினமாயிருந்திருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஹக், இது நம்பவே முடியவில்லை, இந்த இருண்ட சக்தி. இதில் நிறைய இருக்கிறது, அதோடு இது அறிவாற்றலுடைய சிருஷ்டிகரை குறிப்பதாக சொல்லியிருக்கிறீர்கள். எவ்வளவு புத்திசாலி? நீங்க சொல்வதை புரிந்துகொள்ளும்படி கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்க.

**ராஸ்:**வெல், இந்த காட்சியில் ஸ்பேஸ் எனர்ஜி டென்சிட்டி குறித்து பார்த்தோம். இன்றைக்கு அதை டார்க் எனர்கி என்கின்றனர். பிரபஞ்சத்துள்ள எல்லாவற்றிலும் 3 கால் பாகங்களாக பிரிக்கிறது. மேலும் இந்த ஆற்றல் பிரபஞ்சத்தின் விண்வெளியின் மேல்பரப்பில் இருக்கிறது. பரப்பளவு எவ்வளவு அதிகமாயிருக்கிறது அவ்வளவாய் பிரபஞ்சத்தை விரிவடைய செய்யும் டார்க் எனர்ஜியின் தாக்கம் வலிமையாக இருக்கும். அதை மிக வேகமாக சுழற்றிவிட்டால் வெறும் கேஸ் தா கிடைக்கும், நட்சத்திரங்களோ விண்மீன்களோ உண்டாகாது. அதை மிகவும் நிதானமாக சுழலசெய்தால், அப்போது கருப்பான ஓட்டைகளும் நியூட்ரான் நட்சத்திரங்கள் உண்ட்டகும். இரண்டுமே வாழ்வதற்கு ஏற்றதல்ல. வானியலாளர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்

அதாவது இந்த பிரபஞ்சத்தில் உயிர்வாழ்வது சாத்தியமாக இந்த டார்க் எனர்ஜி $10^{120}$ ளும் ஒரு பங்கு அதிகமாக இருக்கும்படி செய்யவேண்டும்.

இந்த துல்லியமான நிலையை அடையசெய்வதொடு மனிதர்களால் சாதிக்க முயலும் காரியங்களை ஒப்பிட்டு பார்த்திடலாம். அதை நான் கவனித்த போது, ஏற்றதாக தோண்டியது கால் டேக் மற்றும் MIT இயற்பியலாளர்கள் கண்டுபிடித்து வடிவமைத்த நமது அரசாங்கம் உண்டாக்கிய கிராவிட்டி வேவ் டெலெஸ்கோப். ஆனால் இந்த இருண்ட சக்தியில் நாம் பார்க்கும் விஷயம் என்னவென்றால் நாம் கிராவிட்டிவேவ் டெலெஸ்கோபில் பார்ப்பதை விட $10^{97}$ மடங்கு அதிகமான ஆற்றலும் ஞானமும் காணப்படுகிறது, அது இவ்வளவு மடங்கு அதிக சக்திவாய்ந்ததாக இருக்கிறது. இப்படியும் சொல்லலாம், இந்த அடார்க் எனர்ஜியை உண்டாக்கியவர் குறைந்தது 10 ட்ரில்லியன் ட்ரில்லியன் ட்ரில்லியன் ட்ரில்லியன் ட்ரில்லியன் ட்ரில்லியன் ட்ரில்லியன் மடங்கு இந்த கால் டெக் மற்றும் MIT இயற்பியலாளர்களைவிட அதிக ஞானமும் அறிவும் உடையவர், நமது அமெரிக்க அரசாங்கத்தைவிட அதிக மடங்கு செலவிட்டிருக்கிறார்.

நான் சொல்லவது புரிகிறதென்று நினைக்கிறேன். அறிவாற்றல், புத்தி, உருவாக்கும் ஆற்றல் இவை ஒரு தனிப்பட்ட நபரின் தன்மைகளை வெளிப்படுத்தும், எனவே இந்த பிரபஞ்சத்தை உண்டாக்கிய தேவன் காலங்களுக்கும் நேரங்களுக்கும் அப்பாற்பட்டவர் மனிதர்களான நம்முடைய திறமைக்கு அப்பாற்பட்ட படைப்பாற்றலும் சிறப்பான

ஆள்தத்துவத்தையும் கொண்டவராக இருக்கிறார் என்பது வெளிப்படுகிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, இந்த வியக்கத்தக்க ஆற்றலுள்ள சிருஷ்டிகர் ஆதியாகமம் 1ல் எளிமையான தகவலை மோசேயிடம் கூறியுள்ளார். அதில் சொல்லப்பட்டிருக்கிறது, வானங்களையும் பூமியையும் சிருஷ்டித்தொடு சிருஷ்டிப்பின் ஆறு நாட்களுக்கு பிறகு ஏழாம் நாளில் அவர் ஓய்ந்திருந்தார். இதில் உண்டாகும் கேள்வி: அவர் இப்படி சொல்வதற்கான அர்த்தம் என்ன அவர் ஒவ்வொரு நாளும் வேலை செய்கிறார் நாள் ஒன்று, நாள் இரண்டு, நாள் மூன்று? நீங்களும் கலந்து கொண்ட விவாத மேடை ஞாபகமிருக்கா சிலே வேதத்தின் அந்த நாட்கள் 24 மணிநேரங்கள் என்றனர் நீங்க எல்லாரும் அது அதிக கால நேரத்தை உடையது என்றீர்கள். நான் அப்போது முன்னிலை வகிக்கும் எபிரேய பண்டிதரை அழைத்திருந்தேன், டாக்டர். வால்டர் கெய்சர், அவரும் நம்மோடு அங்கிருந்தார். இந்த கேள்வி எழும்பினபோது அவரிடம் கேட்டேன்: “யோ” என்பதின் வேதத்தின் தத்ரூபமான மொழிபெயர்ப்பு என்னவாக இருக்கிறது? இப்ப, நீங்களும், அதை கவனியுங்கள்.

## <u>"அறிவியல் மற்றும் பைபிளின் பெரும் விவாதம்"</u>

**ஆன்கர்பெர்க்:** சரி, டாக்டர். வால்டர் கெய்சர், உங்களிடமிருந்து துவங்கிட விரும்புகிறேன். ஆதியாகமம் 1 மற்றும் 2ல் சொல்லப்படும்

நாள் என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன? வேதாகமம் 24 மணிநேரத்தை கொண்ட நாளை பற்றி சொல்கிறதா, அல்லது அதைவிட அதிக நேரத்தை கொண்ட நீண்ட காலத்தை குறிக்கிறதா? சரி, NIV வேதாகமத்தின் மொழிபெயர்ப்பாளர்களில் நீங்களும் ஒருவர், நீங்க எபிரேயத்தை போதிக்கிறீர் உங்களுக்கு சுமார் ஏழு பாஷைகள் தெரியும், எனக்கு தெரிந்தவரை இதுதான் உண்மை. இப்ப எங்களுக்கு உதவுங்க, என்னோட அம்மாவும் புரிந்து கொள்ளும்படியாக கொஞ்சம் விளக்கமாக சொல்லுங்க. நாள் என்ற வார்த்தையின் சரியான வேதாகமம் விளக்கம் என்ன?

**கெய்சர்:** வெல், ஜான், உங்களோடு இருப்பதில் எனக்கு மகிழ்ச்சி, உங்கள் தாயாரை சந்திப்பதில் மகிழ்ச்சி. அதிலும் உங்களுடைய கேள்வியை திரும்பவும் பரிசீலிப்பதில் அதிக மகிழ்ச்சி. இந்த கேள்வி இப்படி இருந்திருக்கணும், நாள் என்ற வார்த்தையின் அர்த்தங்கள் என்ன? நான் பொதுவாக ஒரு வார்த்தைக்கு ஒரு அர்த்தம் தான் இருக்குன் என்று வாதிப்பவன் - ஆசிரியரின் பயன்பாட்டை பொறுத்தது. ஆனால் இந்த காரியத்தில், அதாவது, ஆதியாகமத்தில், அவர் சுமார் மூன்று அல்லது நான்கு வித்தியாசமான விதங்களில் அந்த வார்த்தையை பயன்படுத்தியுள்ளார். நாள் என்ற வார்த்தையின், “யோம்” என்ற எபிரேய வார்த்தை, கிங் ஜேம்ஸ் வேதாகமத்தில் 500 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இங்கிலீஷ் மேன்ஸ் எபிரேய ஒத்தவாக்கியத்தின்படி, “யோம்” என்ற வார்த்தை 58 வித்தியாசமான வார்த்தைகளாக மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. அதினால் இது நியாயமற்ற காரியம் என்றாகாது. இந்த பகுதியில் ராஜாவை குறிக்கிறது, அதனால் அதை நாம் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம். எனவே, நாள் 5ம் வசனத்தில், “பகல்வேளிச்சமாகும்”. நான்காம் வசனத்தின் நாள் என்பது தேவன் 24 மணிநேரத்தையுடைய நாளை உண்டாக்கினார். ஆதியாகமம் 2:4ல் முன்னிடை உட்கூராக பயன்படுத்தப்பட்டுள்ளது, “தேவனாகிய கர்த்தர் வானத்தையும் பூமியையும் உண்டாக்கின நாளிலே” இது சிருஷ்டிப்பின் சகல செயல்பாடுகளையும் குறிக்கிறது, அதாவது நாம சொல்வது போல, “இந்த நபர் ஜனாதிபதியாக இருந்த நாளில்” அல்லது “ஆபிரகாம் லின்கோனுடைய நாளில்.” இதற்கான விடை இதுதான் கருப்பொருளை கருத்தில் கொள்ளவேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** ஓகே, அப்படினா தேவன் சொல்வதைப்பற்றி உங்களுடைய கருத்து என்ன, என்ன சொல்லுகிறார், அது நீண்ட நாட்களை கொண்ட காலமா? அங்கே 3 தெரிந்தெடுப்புகள் இருக்கிறது.

**கெய்சர்:** யா, அவை ஒவ்வொன்றையும் நாம் கவனமாக கையாலவேண்டுமென நினைக்கிறேன். ஆதிகால திருச்சபையின் போதகர்களும் இடைகால போதகர்களும் இந்த காரியத்தில், அதிக கவனத்தோடு இருந்தார்கள் இது அதிக காலத்தை குறிக்கிறதாக

நினைப்பதற்கு, பல காரணங்கள் இருப்பதாக சொல்லப்படுகிறது. அதாவது அஹச்டின் -அல்லது அகஸ்டின், உங்களுடைய விருப்பபடி சொல்லிக்கொள்ளுங்கள் - ஆனால் அகஸ்டினுடைய விதத்தில் சொன்னால், அவர் சொல்கிறார் நாள் ஒன்று, நாள் 2, நாள் 3 என்பதுதான் 24 மணி நேரம் உண்டாவதற்கு முன்பு இருந்தது. அப்போது அங்கே மனிதர்கள் இல்லை என்பதை நான் கருத்தில் கொள்ளவேண்டியது அவசியம், எனவே அது மனிதர்களுடைய கண்ணோட்டமாக இருக்கவில்லை, அது தெய்வீக கண்ணோட்டம். அதோடு, அண்டத்தை சுற்றி வந்துகொண்டிருக்கும் வானியலாளர்கள் இருக்கிறார்கள், அவர்களுடைய கண்ணோட்டத்தில் அதிகப்படியான சூரிய உதயத்தையும் அஸ்தமனத்தையும் காண்கிறார்கள், மாலையும் விடியர்காலமும், சாயங்காலமும் விடியர்காலமும், சாயங்காலமும் விடியர்காலமும், சாயங்காலமும் விடியர்காலமும். சரி, தேவன் அதைவிட துளைவில் இருக்கிறார், என நினைக்கிறேன், நம்முடைய சூரிய குடும்பத்திற்கு அப்பால், எனவே, அதை கருத்தில் கொள்ளபவர்கலாக இருந்திடுவோம்.

அதாவது இந்த காரியத்தை மையப்படுத்தும் படியாக வேதாகம பகுதி வலியுறுத்துவதாக தெரியவில்லை. வேதாகம பதிவு என்ன சொல்ல வருகிறது என்றால், இவை அனைத்தையும் உருவாக்கினவர் தேவன் என்கிறது, “அஆதியிலே” பூம்! தேவன்! அவர் சகலத்தையும் உண்டாக்கினார். நவீன சமுதாயத்துடன் இணைக்கப்படவேண்டிய

உண்மையான விவாதம் என்னவென்றால், உண்மையில் ஆரம்பம் இருக்கிறதா, அது தொடர்பானதா? இந்த வேதப்பகுதி கூறுகிறதை, பாருங்கள், அது உண்மை. தேவனையன்றி ஒன்றுமே இல்லை, அவர் உருவாக்கினார், அவர் சிருஷ்டித்தார். இப்படிதான் இதை நாம் பார்க்க வேண்டும்.

**ஆன்கர்பெர்க்:** ஹக், அது அருமையான விவாதமாக இருந்தாது மேலும் இந்த தொடரில் அதை ஜனங்களுக்கு காண்பித்திட இருக்கிறோம். ஆனா டாக்டர் கெய்சர் பேசுவதை கேட்பது நன்றாக இருக்கிறது. இப்ப, அதாவது, அவர் சொன்ன கடைசி குறிப்ப பாருங்க, இந்த பகுதியில் நீங்க பார்க்க வேண்டிய முதல் காரியம் இந்த பிரபஞ்சத்திற்கு ஒரு துவக்கம் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுதல். இது பரவலாக விஞ்யான கருத்தாக இருக்கவில்லை. சமீபத்தில் தான் இதை ஏற்றுக்கொள்ளும் நிலை நிலவிவருகிறது. அதை பற்றி சொல்லுங்க. ஏதோவொரு கட்டத்தில் இதனுடைய துவக்கம் இருப்பதை வேதமும் அறிவியலும் ஏற்றுக்கொள்கிறது.

**ராஸ்:**அது சரிதான். இயற்பியலில் ஸ்பேஸ் டைம் சூத்திரங்கள் பிரபஞ்சத்திற்கு துவக்கம் இருப்பதாக சொல்கிறது. அதில் நேரத்திற்கும் ஒரு துவக்கம் இருப்பதும் அடங்கும், அதனுடைய அர்த்தம் தேவன் பிரபஞ்சத்தை உருவாக்கும் முன்பே அவர் காலத்திற்கு அப்பாற்பட்டவராக இருந்தார். கால நேரம் என்பதன் நம்முடைய

கண்ணோட்டமும் அவருடைய கண்ணோட்டமும் முற்றிலும் மாறுபட்டதாகவே இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** யா, இந்த உதாரணம் எனக்கு பிடித்திருக்கிறது, நீன வானியலாளராக இருந்தால், ஏன்னா செய்திகளில் சொல்லப்படுவதுபோல இப்ப வானியலாளர்கள் வானத்தில் இருக்கிறார்கள், அவர்கள் 5 அல்லது 6 நாட்களை எட்டு மணிநேர காலமாக பார்க்கிறார்கள், அவ்வளவு வேகமாக இருக்கிறார்கள். எனவே அவர்களுடைய ஒரு நாளில் நமக்கு இங்கு  நம்மை பொறுத்தவரை, பூமியில் பலவித புரட்சிகள் நடந்துவிடும். தேவன் இவைகளுக்கு அப்பாற்பட்டவராக இருக்கிறார், அவருடைய கண்ணோட்டம் என்ன? அவருடைய கால அவகாசம் எப்படிபட்டது? அது எனக்கு ஒரு கேள்வியை முன்வைக்கிறது: இந்த பகுதியில் இருக்கும் “யோம்” மை நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்? வானியலில் உங்களுடைய கண்ணோட்டத்தில் இது எப்படி பொருந்துகிறது? வேதமும் விஞ்யானமும் இதை அங்கீகரிக்கிறதா?

**ராஸ்:**வெல், நா எபிரேய பண்டிதனல்ல, ஆனா ஆதியாகமத்தை முதன்முறை வாசித்தபோது, வால்ட்ட போல நானும் நாள் என்ற வார்த்தை மூன்று வித்தியாசமான வித்தத்தில் பயன்படுத்தப்பட்டதை உணர்ந்தேன். அதன்பிறகு எனக்கு தெரிய வந்தது அதாவது எபிரேயத்தில் நீண்ட காலத்தை குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் ஒரே

வார்த்தை “யோம்”. ஆனால் ஆதியாகமம் 1 ஐ வாசிக்கையில் என்னை திருப்திபடுத்தியது என்னவென்றால் முதல் ஆறு நாட்களுக்கும் சாயங்காலமும் விடியர்காலமும் இருந்தது என்ற புரிந்துகொள்ளுதல், ஆனால் ஏழாம் நாளுக்கு அப்படி இல்லை. வேதாகமத்தில் 3 இடங்களில் - சங்கீதம் 95, யோவான் 5 மற்றும் எபிரேயர் 4- சொல்லப்படுகிறது நாம் தேவனுடைய ஏழாம் நாளில் இருக்கின்றோம். அந்த ஏழாம் நாள் இன்னும் முடிவடைய வில்லை. என்னை சமாதானப்படுத்திய மற்றொரு காரியம் என்னன்னா ஆதியாகமம் 1ல் பார்க்கும்போது மனுஷனில் ஆணும் பெண்ணும் ஆறாம் நாளில் தான் உருவாக்கப்பட்டனர். ஆனால் ஆதியாகமம் 2 ல் தேவன் ஆதாமையும் ஏவாளையும் உருவாக்கியத்தர்க்கு இடையிளுண்டான கால இடைவெளியை குறித்து பார்க்க முடியும். அப்படின்னா ஆறாம் நாளுக்கும் ஏழாம் நாளுக்கும் இடைவெளி அதிகமாயிருந்தால், ஆதியாகமம் 1ல் பயன்படுத்தப்பட்ட இலக்கணப்படி நாள் என்பது அதிக நேர இடைவெளியுடன் இருந்திருக்கும்.

**ஆன்கர்பெர்க்:** ஹக், நீங்க கிறிஸ்தவராக ஆனதற்கு முன்பு பல தூய நூல்களை வாசித்திருக்கிறீர்கள் என்று தெரியும். அவைகளை வேதம் சொல்லும் காரியங்களோடு ஒப்பிடும்போது, எல்லா விதமான தகவல்களையும் அள்ளிப்பது வேதாகமம் மட்டும் தான் என்பதை அறிந்துகொண்டீர்கள். அதை பற்றி விளக்கமாக சொல்லுங்க.

**ராஸ்:**வெல், இதில் மாத்திரமே தேவன் காலங்களுக்கு அப்பாற்பட்டவர் என்று சொல்லப்பட்டுள்ளது, நேரங்களுக்கு விலக்கப்பட்டவர், நித்திய நித்தியமான காலத்திற்கு உட்பட்டவர். விஞ்யான பத்திபுகளோடு பார்க்கும் பொது இதில் மட்டுமே சியான விதத்தில் சிருஷ்டிப்பின் நிலை வரிசை படுத்தப்பட்டுள்ளது. கால நேரத்தை சரியான கொண்டுள்ளது, படிம பதிப்புகளின் விளக்கத்தை கொண்டிருக்கிறது, மனுக்குலம் உருவாவதற்கு முன்பு புதிய இனங்கள் தோன்றியதையும் மனிதர்களுக்கு பிறகு ஒன்றும் உருவாகாததையும் இதில் காணமுடியும். ஆறு நாட்கலாக தேவன் சிருஷ்டித்தார், ஏழாம் நாளில் தனது சிருஷ்டிப்பின் செயலை நிறுத்திவிட்டார். நான் பார்த்த எல்லா தூய நூல்களிலும், இயற்கையின் புத்தகம் சொல்லும் அனைத்து காரியங்களோடு ஒத்திருக்கும் ஒரே ஒரு புத்தகம் இருதான். உண்மையில், தேவன் இரண்டு விதங்களில் தம்மை வெளிப்படுத்தியதை கூறுகிறது: இயற்கையின் புத்தகம் மற்றும் வேதாகமா புத்தகம். வேதாகமம் மாத்திரமே முற்றிலும் பொருந்தி இருக்கிறது.

**ஆன்கர்பெர்க்:** சரி, பிரியமானவர்களே, இன்றைய தகவல்களால் பிரயோஜனமடைந்திருந்தால் அடுத்த வாரம் வரை காத்திருங்கள், ஏனென்றால் ஆதியாகமம் 1 மற்றும் ஆதியாகமம் 2 ல் வேதம் நமக்கு

வெளிப்படுத்திடும் காரியங்களை குறித்து இன்னும் அதிகமாக பார்த்திடலாம். இணைந்திருப்பீர்கள் என நம்புகிறேன்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.